**சோமாலி கடற்கொள்ளைக்காரர்களினால் கப்பல் கடத்தல் செய்யப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டமை தொடர்பிலான கூற்று**

கடற்கொள்ளைக்காரர்களினால் இலங்கைக் கொடி பறக்கவிடப்பட்ட எரிபொருள் சரக்கு ஏற்றும் கப்பல் கடத்தப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டதும் அறிவிக்கப்பட்டுள்ளதுமான விடயம் தொடர்பிலான ஊடக அறிக்கைகள் பற்றி இந்த அமைச்சிற்கு தெரியும்.

இவ்வமைச்சானது குற்றம் சாட்டப்பட்டுள்ள இச்சம்பவம் உண்மையானதா என்பதை சரிபார்ப்பதற்காக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றதுடன் அது மேற்கொண்ட ஆரம்ப விசாரணைகள் சம்பந்தப்பட்ட இந்தக் கப்பல் இலங்கைக் கொடியொன்றின் கீழ் பதிவு செய்யப்படவில்லை என்ற விடயத்தையும் அது இலங்கை கப்பல் பணியாளர்கள் 8 பேர்களைக் கொண்டுள்ளது என்பதையும் தெரிவித்துள்ளன.

இவ்வமைச்சு கப்பற் சேவை முகவர்களுடனும் சம்பந்தப்பட்ட அதிகார பீடங்களுடனும் வெளிநாடுகளிலுள்ள இயைபுள்ள இலங்கைத் தூதரகங்களுடனும் இலங்கைக் கப்பற் பணியாளர்களின் பாதுகாப்பையும் நலனோம்பலையும் உறுதிப்படுத்துவதன் பொருட்டு மேலும் தகவல்களை விசாரித்து அறிந்து கொள்வதற்காக தொடர்ந்தும் தொடர்புகளை வைத்துக் கொண்டிருக்கின்றது.

எனவே குற்றம் சாட்டப்பட்டுள்ள இச்சம்பவம் தொடர்பில் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் கிடைத்தவுடன் இவ்வமைச்சானது கப்பல் பணியாளர்களின் பாதுகாப்பிற்கு பாதிப்பு ஏற்படாதவொரு முறையில் தகவல்களைப் பகிர்ந்து வழங்கும்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு
கொழும்பு
2017 மார்ச் 14ஆந் திகதி